# වාර්ෂික කාර්යසාධන වාර්තාව

# வருடாந்த முன்னேற்ற அறிக்கை

# Annual Performance Report

# 2014



**පශු සම්පත් සහ ග්‍රාමීය ප්‍රජා සංවර්ධන අමාත්‍යාංශය**

**கால்நடைவள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு**

**Ministry of Livestock and Rural Community Development**

**கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு**

# வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

# 2014

# உள்ளடக்கம்

**1. அறிமுகம்**

**2. பின்னணி**

2.1 கிராமிய பிரிவு

**3. கிராமிய சமூக அபிவிருத்தி**

3.1 பின்தங்கிய பிரதேசங்களில் சமூக பொருளாதார அபிவிருத்தி

3.2 கிராமிய பிரதேசங்களில் ஜீவநோபாயம் மற்றும் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல்.

3.3 தோட்ட பிரிவுகளில் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம்

3.4 2014-ஆம் ஆண்டு அமுல்படுத்தப்பட்டுள்ள கிராமிய சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் செயற்றிட்டங்களின் முன்னேற்றமும்

**4. அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் முன்னேற்றம்**

4.1 பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியம்

# கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு

## நோக்கு:

கிராமிய சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் அதேவேளை கால்நடை வள உற்பத்தி துறையில் தன்னிறைவு காணல்.

## செயற்பணி:

கிடைக்கப்பெறும் வளங்களின் சிறந்த முகாமைத்துத்தின் ஊடாக கால்நடை வளத்துறையினதும் கிராமிய சமூகத் துறையினதும் பேண்தகு அபிவிருத்தியை உறுதி செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை முன்னெடுத்தல்.

## அமைச்சின் குறிக்கோள்கள்

- காலநடை வள விவசாயிகளின் பேண்தகு, சமத்துவ பொருளாதாரம் மற்றும் சமூக நலன்களின் அடைவு.
- நுகர்வோர்களுக்காக போட்டி விலையில் உள்ளூர் கால்நடை வள உற்பத்தி பொருட்களின் வழங்களை அதிகரித்தல்
- 2016-ஆம் ஆண்டளவில் தன்னிறைவு மட்டத்தை அடையும் பொருட்டு, உள்நாட்டுப் பால் உற்பத்தியை அதிகரித்தல்.
- 2016-ஆம் ஆண்டளவில் தற்போதைய கோழிப் பண்ணை உற்பத்திகளை இரண்டு மடங்காக அதிகரித்தல்.
- **பின்தங்கிய பகுதிகளில் வாழும் கிராமிய சமூகத்தின் சமூக பொருளாதார தரத்தை மேம்படுத்தல்.**
- **அடிப்படை வசதிகளின் முன்னேற்றம் மற்றும் வாழ்வாதார அபிவிருத்தி ஆகியவற்றின் ஊடாக கிராமிய சமூகத்தின் வருமான மட்டத்தை அதிகரித்தல்.**
- **சமூகசார் அமைப்புகளை வலுப்படுத்தல் மூலம் கிராமிய சமூகத்தைப் பலப்படுத்தல்.**
- **கிராமிய சமூகத்தை அண்மித்த கல்வி, தொழிற்சார் பயிற்சி, சமய அலுவல்கள், விளையாட்டு மற்றும் கலாசார நடவடிக்கைகளை மேம்படுத்தல்.**

## காலநடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்கள் :

01. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்
02. தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை
03. மில்கோ (தனியார்) நிறுவனம்
04. வரையறுக்கப்பட்ட இலங்கை கோழிப்பண்ணை அபிவிருத்தி (தனி) நிறுவனம்
05. வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வள தொழிற்சார் நிறுவனம்
06. சௌமியமூர்த்தி தொண்டமான ஞாபகார்த்த மன்றம்
07. **பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியம்**

***(பெருந்தோட்ட பிரதேசங்களில் அமுல்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்களினதும் செயற்திட்டங்களினதும் முன்னேற்றம் மற்றும் தற்போது தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள பெருந்தோட்ட மனித வள பொறுப்பு நிதியத்தின் செயலாற்றுகை மாத்திரம் **"2014 செயலாற்றுகை அறிக்கை"** கீழ் விபரிக்கப்பட்டுள்ளது.)*

# 01. அறிமுகம்

கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சானது, பின்தங்கிய பகுதிகளில் வாழும் கிராமிய சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதையும், கால்நடை உற்பத்தியில் நாட்டின் தன்னிறைவு காணச் செய்வதையும் நோக்காகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இரு பிரதான துறைகளின் ஊடாக அமைச்சின் வேலைத்திட்டங்களும் செயற்திட்டங்களின் அபிவிருத்தியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

01. கால்நடை வள அபிவிருத்தி
02. கிராமிய சமூக அபிவிருத்தி

2015 ஆம் ஆண்டு புதிய அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர் அப்போது கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சிற்கு கீழ் கையளிக்கப்பட்டிருந்த, கால்நடை வள மற்றும் சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் உள்ளிட்ட, கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனங்கள், சமூக சேவைகள், நலன்புரி மற்றும் கால்நடை வள அபிவிருத்தி அமைச்சின் கீழ் வர்த்தமானி அறிவித்தல் செய்யப்பட்டுள்ளது.

01. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களம்
02. தேசிய கால்நடை வள அபிவிருத்தி சபை
03. மில்கோ (தனியார்) நிறுவனம்
04. வரையறுக்கப்பட்ட இலங்கை கோழிப்பண்ணை அபிவிருத்தி (தனி) நிறுவனம்
05. வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வள தொழிற்சார் நிறுவனம்
06. சௌமியமூர்த்தி தொண்டமான ஞாபகார்த்த மன்றம்

அப்போதிருந்த கால்நடை வள மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் அதிகாரம் அளிக்கப்பட்ட பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் கீழ் வர்த்தமானி அறிவித்தல் செய்யப்பட்ட ஒரே நிறுவனமானது பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியமாகும்.

பெருந்தோட்ட பகுதிகளில் வாழும் மக்களின் சமூக பொருளாதாரத்தை மேம்படுத்தும் முகமாக தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு அதிகாரம் பெற்றிருக்கின்றமையால், “2014 செயலாற்றுகை அறிக்கை” ஊடாக தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் அதிகார எல்லையின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள பெருந்தோட்ட பிரிவுகளுக்குள் வாழும் கிராமிய மக்களின் விடயங்கள் சம்பந்தமாக செயற்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி வேலைத்திட்டங்கள், செயற்திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் 7 பிரதேச அலுவலகங்களினால் செயல்படுகின்ற, பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியத்தை சார்ந்த முன்னேற்றங்கள் பற்றி மாத்திரமே கலந்தாலோசிக்கப்படும்.

# 02.பின்னணி

## 2.1 கிராமிய பிரிவு

இலங்கையில் கிராமிய சமூகமானது, பொருளாதாரத்தின் முக்கிய கூறுகளில் ஒன்றாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கிறது. கிராமிய சமூகம் சுமார் 16 மில்லியன் சனத்தொகையை கொண்டுள்ள அதேவேளை இதில் ஏறக்குறைய 1 மில்லியன் மக்கள் தோட்டப் பகுதிகளில் வாழ்கின்றனர்.

இலங்கையில் தேசிய வறுமை கோட்டின் வீதம் 2007 ஆம் ஆண்டில் 15.2% ஆகவும், 2010 இல் 8.9% ஆகவும் காணப்பட்டது. 2007 இல் நகர, கிராமிய மற்றும் தோட்ட பகுதிகளில் இது முறையே 6.7, 15.7 மற்றும் 32.0 வீதமாக காணப்பட்டதுடன், 2012/2013 காலப் பகுதிகளில் தோட்டப் பிரிவு விடயத்தில் வறுமை கோட்டின் வீதம் 10.9% ஆகவும், இப்பிரிவில் மனை அலகுகளின் அளவு 8.8% ஆகவும் காணப்பட்டமையினால் மக்கள் உத்தியோகபூர்வ வறுமைக் கோட்டிலிருந்து கீழ் மட்டத்தை கொண்டுள்ளனர்.

புள்ளிவிபரத்திரட்டு திணைக்கத்தின் 2012/2013 காலப் பகுதிகளில் குறிப்பிடப்பட்டிருந்த சாதாரண, மத்திய மனை அலகுகளின் வருமானக் கணக்கின் பிரகாரம் தோட்டப் பகுதி மனை அலகு ஒன்றின் சாதாரண வருமானம் ரூ. 30,220.00 என்பதுடன், அதேவேளை அதன் அளவு கிராமிய, நகர பிரிவுகளை விட குறைந்த அளவிலான பெறுமதியைக் கொண்டுள்ளது. இதற்கு மேலதிகமாக தோட்டப் பிரிவில் சாதாரண தனி நபர் வருமானம் தேசிய சாதாரண தனி நபரின் மாதாந்த வருமானத்திலிருந்து நூற்றுக்கு 65 வீதமாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

புவியியல் ரீதியான இவ் அபிவிருத்தி வேறுபாட்டினை கருத்திற் கொண்டு அரசாங்கமானது, பின்தங்கிய பகுதிகளின் அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கியுள்ளது. கிராமிய வறிய சமூகத்தின் விசேடமாக தோட்டப்பகுதி வறிய மக்களின் வாழ்க்கைத் நிலையைத் தரமுயர்த்துவதற்கு, இவ் அமைச்சானது, பின்தங்கிய பகுதிகளுக்கான புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை அமுல்படுத்தியுள்ளது. பெருந்தோட்ட தொழிலாளர்களின் மானிட மற்றும் சமூக அபிவிருத்தி செயற்பாடுகளுடன் தொடர்புடைய நிறுவனமான பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியம் மற்றும் பெருந்தோட்ட மக்களின் சமய, கல்வி, தொழிற்பயிற்சி, கலைகள், சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி மேம்பாட்டுக்கான சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் ஆகியன அமைச்சின் கீழ் இயங்கும் கிராமிய சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்தும் நிறுவனங்களாகும்.

# 3. கிராமிய சமூக அபிவிருத்தி

பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் அடிப்படை வசதிகளை முன்னேற்றுதல், அடிப்படை தேவைகளை வழங்குதல் என்பன கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் முக்கிய நோக்கமாகும். கிராமிய சமூக அபிவிருத்தி பிரிவிற்கு கையளிக்கப்பட்டுள்ள முன்னுரிமை பணியானது, தேசிய கொள்கைகளுக்கு அமைவாக அமைச்சின் நோக்கு மற்றும் செயற்பணிகளை பிரத்தியட்சமாக மேற்கொள்ளும் நோக்குடன் நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக நிறைவேற்றப்படாத, அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் இளைஞர் யுவதிகளை வலுவூட்டுவதற்கும் சமய, கலாசார பேணுதலுக்குமான சமூக நலன்புரி சேவைகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் விசேட கவனம் செலுத்துவதாகும்.

2014 ஆம் ஆண்டில் கிராமிய சமூக அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு ரூ.881.5 மில்லியனாகும். இதன் தொடர்பில் ஒதுக்கப்பட்ட மேலதிக நிதி ஒதுக்கீட்டின் காரணமாக மொத்த நிதி ஒதுக்கீட்டுத் தொகை ரூ.949.5 மில்லியனாக அதிகரித்துள்ளது. 2014 ஆம் ஆண்டு இறுதியில் இத்தொகையிலிருந்து ரூ.876.73 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது. இவ் அமைச்சினால் நிறைவேற்றப்படுகின்ற அபிவிருத்தி செயற்திட்டங்கள், அமைச்சின் கீழ் இயங்கும் சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றம் மற்றும் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியத்தின் ஊடாகவும், மாகாண சபை, உள்ளூராட்சி நிறுவனம், மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள் ஊடாகவும் அமுல்படுத்தப்படுகிறது. இவ்வாறு அமுல்படுத்தப்படுகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் ஊடாக பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் முகமாக கணிசமான முன்னேற்றத்தை அடைய முடிந்துள்ளது.

**இப்பிரிவின் கீழ் பிரதான மூன்று அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன**

**01. பின்தங்கிய பகுதிகளுக்கான சமூக, பொருளாதார அபிவிருத்தி**

**02. கிராமிய பகுதிகளில் வாழ்வாதாரம் மற்றும் அடிப்படை வசதிகளின் முன்னேற்றம்.**

**03. தோட்டத்துறை வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம்**

மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் கிராமிய மற்றும் தோட்டத்துறை மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் முகமாக, அமைச்சின் கிராமிய சமூக அபிவிருத்தி பிரிவினால் பின்வரும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## 3.1 பின்தங்கிய பிரதேசங்களில் சமூக பொருளாதார அபிவிருத்தி (உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி)

கிராமிய மற்றும் தோட்ட பிரிவுகளில் வறுமை உச்ச நிலையை அடைவதற்கு முக்கிய காரணம் அடிப்படை வசதிகள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் ஆகக் குறைந்த நிலையில் காணப்படுவதாகும். இதன் அடிப்படையில மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்வடைய செய்து வறுமையை ஒழிப்பதற்காக வீதி முறைமைகளை மேம்படுத்தி,

உட்பிரவேச வீதிகளை அமைத்தல், குடிநீர் வழங்குதல், வீடுகளின் கூரைதத் தகடுகளை மீள சீரமைத்தல், சுகாதார வசதிகளை பூர்த்தி செய்தல் போன்றவற்றையும், சனசமூக நிலையங்களை நிர்மாணித்தல் மற்றும் நலன்புரி சங்கங்களை ஊக்குவிப்பதற்காக உபகரணங்கள் வழங்குதல் போன்ற பல செயற்பாடுகள் தோட்டப்புறங்களிலும் கிராமியப் பகுதிகளிலும் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை: 1 ( 2014 ஆண்டளவில் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் முன்னேற்றம்)**

| 1அமுல்படுத்தும் நிறுவனம் | கூரைத்தகடுகள் வழங்குதல் | | நீர் வள செயற் திட்டம் | | சுகாதார வசதிகள் | | உட்பிரேவச வீதி | | வேறு அலுவல்கள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அலகு (கூறு) எண்ணிக்கை | நிறைவு செய்த | செயற்திட்ட திட்ட எண்ணிக்கை | நிறைவு செய்த | அலகு (கூறு) எண்ணிக்கை | நிறைவு செய்த | செயற்திட்ட திட்ட எண்ணிக்கை | நிறைவு செய்த | செயற்திட்ட திட்ட அலகு எண்ணிக்கை | நிறைவு செய்த | அமுல்படுத்தப்பட்ட செயற் திட்டம் - அலகு எண்ணிக்கை | 2014 இல் நிறைவு செய்த |
| பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியம் | 306 | 306 | 25 | 11 | 1138 | 1170 | 84 | 31 | 148 | 88 | **1944** | **1606** |
| மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்கள், மா நகர சபை மற்றும் பிரதேச சபை | - | - | 32 | 14 | - | - | 156 | 75 | 104 | 25 | **292** | **114** |
| கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு | 5 | 4 | 2 | 1 | - | - | - | - | 16 | 13 | **23** | **18** |
| **மொத்தம்** | **311** | **310** | **59** | **26** | **1381** | **1170** | **240** | **106** | **268** | **126** | **2259** | **1738** |

மூலம்: தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு (அபிவிருத்தி பிரிவு), * வேறு அலுவல்: சமயம், கலாசார, கல்வி, விளையாட்டு அபிவிருத்தி பொது வசதிகள் மற்றும் விசேட அலுவல்கள்

**படம் 1 குழாய்க் கிணறு**
**டிக்கோயா தோட்டம்**



டிக்கோயா தோட்டம் (கட்டம்II) அலகு: 01

மொத்த செலவின் மதிப்பீடு : ரூ.3,253,324.00

பிராந்திய பெருந்தோட்ட கம்பனி (RPC): வட்டவல

பிராந்திய பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு பொறுப்பு நிதியம் : ஹட்டன்

**படம் 2 மலசலக்கூடம் நிர்மாணித்தல்**
**ரீல்ஹேன தோட்டம்**



மொத்த செலவின் மதிப்பீடு : ரூ.40,000.00

பிராந்திய பெருந்தோட்ட கம்பனி: கஹவத்த

பிராந்திய பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிதியம் : இரத்தினபுரி

## 3.2 கிராமிய பிரதேசங்களில் வாழ்வாதாரம் மற்றும் அடிப்படை வசதிகளை முன்னேற்றுதல்

**(இளைஞர் சமூகத்தை வலுவூட்டல்)**

மேற்கூறப்பட்ட செயற்பாட்டின் கீழ் கிராமிய பிரதேசங்களில் வாழும் சலுகைகள் குறைந்த இளைஞர் சமூகத்தினரை ஊக்குவிப்பதை இலக்காகக் கொண்டு இங்கு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன. தோட்டப் பிரிவுகளில் வேலையற்ற இளைஞர் யுவதிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டு, அவர்களை பொருளாதார ரீதியில் சக்தி வாய்ந்தவர்களாக உருவாக்கும் நோக்குடன் சுயதொழில் உருவாக்கம் மற்றும் சுயதொழில் கடன் வழங்குதல், தொழில் முயலுநர்களாக பயிற்றுவித்தல், நவசக்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் தோட்டப் பிரிவு சுயதொழில் சுழற்சி நிதியம் அமுல்படுத்துவதன் மூலம் சுயதொழில் வாய்ப்புக்களை உருவாக்க எதிர்ப்பார்க்கப்படுகிறது.

### 3.2.1 கடன் வசதிகளை வழங்குதல்

**அட்டவணை 2 (சுயதொழிலுக்கான கடன் வசதி வழங்கியதன் முன்னேற்றம்)**

| செயற்பாடு | கருத்திட்டம் மற்றும் நிகழ்ச்சித் திட்டம் | முன்னேற்றம் |
|---|---|---|
| சுயதொழிலுக்கான கடன் வசதிகளை வழங்குதல் | • நவ சக்தி நிகழ்ச்சித் திட்டம் | 349 பயனாளிகளுக்கிடையில் ரூ.16 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது |
| | • பெருந்தோட்டதுறை சுயதொழில் சுழற்சி நிதி | புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

### 3.2.2 தகவல் தொழில்நுட்பம்

**அட்டவணை 3: (தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தியின் முன்னேற்றம்)**

| கருத்திட்டம் மற்றும் நிகழ்ச்சித் திட்டம் | பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை – செயற்திட்டங்களின் எண்ணிக்கை | நிலையங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| பிரஜா சக்தி நிகழ்ச்சித்திட்டம்<br>▪ கணனி பயிற்சி<br>▪ இணையத்தள வசதிகளை வழங்குதல் | 39,310<br>(2006 முதல் 2014 டிசெம்பர் 31 வரையில்) | 45 |
| புதிய நிலையங்களை அமைத்தலும் அமுல்படுத்தலும் | 35 புதிய நிலையங்களுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது | |

### 3.2.3 தொழிற் பயிற்சி

**அட்டவணை 4: (தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை)**

| செயற்பாடு | கற்கை நெறி | பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை (2014 ஜனவரி – டிசெம்பர்) |
|---|---|---|
| ஹட்டன் தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையத்தில் | மோட்டார் தொழில்நுட்பம் (பழுதுபார்த்தல்) | 31 |
| | மின்சார தொழில்நுட்பம் (பழுதுபார்த்தல்) | 25 |
| | தொழில்நுட்ப நிபுணர் | 11 |
| | திட்டமிடல் வரைஞர் | 08 |

| செயற்பாடு | கற்கை நெறி | பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை (2014 ஜனவரி – டிசெம்பர்) |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்ட தொழிற் பயிற்சிகள் | அலுமினியம் பெப்ரிகேட்டர் | 30 |
| | தச்சுவேலை (தச்சு தொழில் நுட்பம்) | 09 |
| | கணனி பிரயோக உதவியாளர் | 34 |
| | ஆடை தயாரிப்பு | 34 |
| | வீட்டுத்துறை மின்சார உபகரணங்களை பழுதுபார்த்தல் | 19 |
| | ஹோட்டல் கற்கை நெறி | 18 |
| | மோட்டார் சைக்கிள் தொழில்நுட்பம் | 30 |
| | ஓட்டுனர் (வேல்டின்) | 23 |
| | வானொலி - ரூபவாஹினி சார்ந்த உபகரணங்களை பழுதுபார்த்தல் | 3 |
| | **மொத்தம்** | **275** |

### 3.2.4 விளையாட்டு வசதிகளை வழங்குதல்

கிராமிய மற்றும் நகர பிரதேசங்களில் வாழும் இளைஞர்கள் அனுபவிக்கும் சலுகைகளை தோட்டப் புறங்களில் வாழும் இளைஞர் சமூகத்தினர் அனுபவிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. இதற்கு காரணம் தனித்தனி குழுக்களாக தோட்டங்களை அண்மித்து வாழும் இவ் இளைஞர்களுக்கு குறைந்த கல்வி, சொத்துரிமை, ஏனைய வசதிகளை நாடுவதிலுள்ள கஷ்டம் என்பதாகும். ஆகையினால் இவ் இளைஞர் சமூகத்தினருக்கு ஏற்படக்கூடிய விரக்தி நிலைக்கு தீர்வாக அவர்களின் நலன்புரிக்காக பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. தோட்டப் புறங்களில் திறனுள்ள உழைப்பாளிகளை உருவாக்குதல் மற்றும் சமூக, பொருளாதார ரீதியில் பலம் வாய்ந்த இளைஞர்களை உருவாக்குதலும் ஓய்வு நேரத்தை பயனுள்ள வகையில் கழிப்பதற்காக தேவையான பௌதீக சுற்றாடலை ஏற்படுத்திக் கொடுப்பதும் இக்கருத்திட்டம் மற்றும் நிகழ்ச்சித் திட்டத்தின் எதிர்ப்பார்ப்புகளாகும்.

**அட்டவணை: 5 (விளையாட்டு நிகழ்ச்சித் திட்டம் - கருத்திட்டம்)**

| செயற்பாடு | நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற் திட்டங்கள் | பதிவு செய்யப்பட்ட மாணவர்கள் - விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை – செயற் திட்ட எண்ணிக்கை | பயிற்சி பெற்ற மாணவர்கள் - விளையாட்டு வீரர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| விளையாட்டு வசதிகளை வழங்குதல் | தொண்டமான் விளையாட்டுத் தொகுதி<br>▪ கரப்பந்து, கால்பந்து, வலைப்பந்து, பெட்மின்டன், ஜிம் | 110 | 1000 (பாடசாலை மாணவர்கள் உள்ளடங்களாக) |
| | விளையாட்டு மைதானம் நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி<br>• கரப்பந்து, கால்பந்து, கூடைப்பந்து விளையாட்டு மைதானம் நிர்மாணித்தல் மற்றும் அபிவிருத்தி<br>• விளையாட்டு பொருட்கள் வழங்குதல் | 48 | |

**படம் : 3 (பிரதேச கரப்பந்தாட்ட மைதானம் - காலி அரபொலகந்த)**



### 3.2.5 இளைஞர் கூட்டுறவு சங்கங்களை ஸ்தாபித்தல்

2014 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பிரஜாசக்தி இளைஞர் வலுவூட்டல் கூட்டுறவுச் சங்கமானது தாய் சங்கம் ஒன்றையும் 44 கிளைச் சங்கங்களையும் கொண்டுள்ளது.

கூட்டுறவு கொள்கையின் பிரகாரம் சங்க அங்கத்தவர்களின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக, வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுதல், சேமிப்பு மற்றும் கடன் வழங்கும் நடவடிக்கை, நலன்புரி நடவடிக்கைகள் மற்றும் கலாசார செயற்பாடுகளில் ஈடுபடுதல், சங்க அங்கத்தவர்களின் வாழ்வாதார அபிவிருத்தி, கலாசார நடவடிக்கைகள், சமூக ரீதியிலான அபிவிருத்திக்காக ஊக்குவித்தலும் அதற்கான வசதி வாய்ப்புகளை வழங்குதல் என்பன இச்சங்கங்களின் அடிப்படை நோக்கமாகும்.

### 3.2.6 கலாசார, சமய, சகவாழ்வு மற்றும் கல்வி வசதிகளை வழங்குதல்

கல்வி வசதிகளை மேம்படுத்துவதன் ஊடாக பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் மக்களின் வறுமையை குறைப்பதே இங்கு எதிர்ப்பார்க்கப்படுகிறது. அத்தோடு சமய, கலாசார, சகவாழ்வினை ஏற்படுத்துவதன் ஊடாக ஆன்மீகத்தில் அபிவிருத்தி அடையக்கூடிய மக்கள் சமூகத்தை உருவாக்குவதும் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

**அட்டவணை 6 : (கலாசார/சமய மற்றும் கல்வி வசதிகளை வழங்குதல்)**

| செயற்பாடு | கற்கை நெறி | மாணவர்களின் எண்ணிக்கை – செயற்றிட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| தொண்டமான் கலாசார நிலையம் - இரம்பொடை | கர்நாடக சங்கீதம், வீணை, மிருதங்கம், வயலின் மற்றும் நடனம் | 35 |
| சமய மற்றும் கலாசார நிலையங்களை நிர்மாணித்தல் | இந்து, பௌத்த மத வணக்க ஸ்தலங்கள் மற்றும் கலாசார நிலையங்களை அமைத்தல் | 20 |
| பாடசாலை கட்டடங்களை நிர்மாணித்தல் மற்றும் ஏனைய கல்வி வசதிகளை வழங்குதல் (கட்டடங்கள் மற்றும் பொருட்களை வழங்குதல்) | பாடசாலை கட்டடங்களை நிர்மாணித்தல் விஞ்ஞானக் கூடங்கள் நிர்மாணித்தல், வகுப்பறைகளை திருத்தம் செய்தல், பாடசாலை வாத்தியக் குழுக்களுக்கான உபகரணங்கள் வழங்குதல் மற்றும் (மல்டிமீடியா) உபகரணங்களை வழங்குதல். | 14 |

**படம் 4 - பல்லேகெட்டுவ கலாசார மண்டபம்**



பிராந்திய பெருந்தோட்ட மனித
அபிவிருத்தி பொறுப்பு நிதியம் : பதுளை
பெறுமதி ரூ.9,847,429.53

## 3.3 தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டம்

“புதிய வாழ்க்கை வீடமைப்புத் திட்டம்” தோட்டங்களை அண்மித்து வரிசை வீடுகளில் வாழும் சமூகத்தினருக்கு தனித்தனி வீடுகளை வழங்குவதற்கு ஏற்படுத்தப்பட்ட கருத்திட்டமாகும். இந்நிகழ்ச்சித்திட்டத்திற்கு 2014 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு சுமார் ரூ.195 மில்லியன் என்பதுடன், ஆண்டு இறுதியில் காணப்பட்ட செலவு ரூ.147.69 மில்லியனாகும்.

### அ. பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியம் - “புதிய வாழ்க்கை வீடமைப்புத் திட்டம்”

இந்த திட்டத்தின் கீழ் பயனாளி குடும்பங்களுக்கு 07 பர்ச்சஸ் காணி வழங்கப்படுவதுடன் நிர்மாணிக்கப்படும் ஒரு வீட்டிற்கான செலவு ரூ.440,000.00 ஆகும். இதில் ரூ.200,000.00 கடனாகவும் ரூ.240,000.00 உதவுத் தொகையாகவும் வழங்கப்படுகிறது. 2012 ஆண்டில் வீடொன்றினை நிர்மாணிப்பதற்கான மொத்தச் செலவுத் தொகை திருத்தப்பட்டுள்ளதுடன், இப்புதிய வாழ்க்கை வீடமைப்புத் திட்டத்திற்காக வழங்கப்படுகின்ற கடன் தொகை ரூ.275,000.00 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையிலான II கட்டத்தின் கீழ் வீடொன்றின் மொத்தச் செலவு ரூ.515,000.00 ஆகும். 2014 ஆம் ஆண்டின் 222 வீடுகளின் நிர்மாண வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய வீடுகளின் நிர்மாண வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**அட்டவணை 7 : புதிய வாழ்க்கை வீடமைப்புத்திட்டங்களை அண்மித்த முன்னேற்றம்**

| இல | பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியம் (பிரதேச அடிப்படையில்) | 2014 ல் நிறைவு செய்யப்பட்ட வீட்டு அலகுகளின் எண்ணிக்கை | நடைபெற்றுகொண்டிருக்கும் வேலை (வீட்டு அலகுகளின் எண்ணிக்கை) | 2014 – செலவு (பிரதேச அடிப்படையில்) ரூபா |
|---|---|---|---|---|
| 1 | காலி | 74 | 47 | 55,576,606.00 |
| 2 | இரத்தினபுரி | - | 65 | 3,106,000.00 |
| 3 | பதுளை | 25 | 20 | 5,304,500.00 |
| 4 | கேகாலை | - | 118 | 11,796,000.00 |
| 5 | கண்டி | 51 | 80 | 10,270,300.00 |
| 6 | ஹட்டன் | 22 | 84 | 21,355,810.00 |
| 7 | நுவரெலியா | 50 | 203 | 39,015,100.00 |
| | | **222** | **617** | **146,424,316.00** |

மூலம்: தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு (அபிவிருத்தி பிரிவு)

படம் **5** : வீடமைப்பு நிர்மாணம்
காலி பிரதேசம் - நிவ்செட்டல் தோட்டம்



படம் **6** : வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்
கண்டி பிரதேசம் - குவின்ஸ்பரி தோட்டம்



வீட்டின் அலகுகள் 25 - செலவு ரூ.13,390,000

**ஆ. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை – சுய உதவி வீடமைப்புத் திட்டமும் விசேட செயற்றிட்டங்களும்.**

இந்த தோட்ட வீடமைப்பு செயற்திட்டமானது, 2010 ஆண்டின் இறுதிப் பகுதியில் இவ் அமைச்சிடம் கையளிக்கப்பட்ட வேளை, தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக 1248 வீடுகளின் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தன.

கடந்த ஆண்டில் புதிய செயற்றிட்டங்கள் எதுவும் அங்கீகரிக்கப்படவோ அல்லது ஆரம்பிக்கப்படவோ இல்லை. இச்செயற்றிட்டத்தின் கீழ் தொடர்ச்சியான செயற்றிட்டங்களுக்காகவே நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. 2014 ஆம் ஆண்டில் தொடர்ச்சியான வீட்டு அலகுகள் 471 ஆகும்.

**அட்டவணை 8 : சுய உதவி வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம்**

| ஆண்டு | நிறைவு செய்யப்பட்ட வீட்டு அலகுகள் | நிறைவு செய்யப்படவுள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 2011 | 397 | |
| 2012 | 326 | |
| 2013 | 54 | |
| 2014 | - | 471 |
| மொத்தம் | 777 | 471 |

மூலம் : தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு (அபிவிருத்தி பிரிவு)

## 3.4 2014 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட கிராமிய சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் முன்னேற்றம்

**அட்டவணை 9: கிராமிய சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளின் முக்கிய பிரிவுகளின் நிதி முன்னேற்றம்**

| உப செயற்றிட் | செலவு விடய குறியீடு | பிரிவு / செலவு விடயம் | மொத்த நிதி ஒதுக்கீடு ரூபா | 2014.12.31 வரையிலான செலவு ரூபா | நிதி முன்னேற்றம் வீதம் (%) |
|---|---|---|---|---|---|
| 1 | 2502 | கிராமிய பிரதேசங்களில் வாழ்வாதாரமும் அடிப்படை வசதிகளையும் முன்னேற்றுதல் | 200,000,000.00 | 193,374,907.00 | 96.68 % |
| 2 | 2502 | பின்தங்கிய பிரதேசங்களில் சமூக பொருளாதார அபிவிருத்தி | 599,500,000.00 | 535,663,594.00 | 89.35 % |
| 16 | 2502 | தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் | 150,000,000.00 | 147,695,790.00 | 98.46 % |
| | | **மொத்த செலவு** | **949,500,000.00** | **876,734,291.00** | **92.34%** |

மூலம்: :தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு (கணக்குப் பிரிவு)

# 4 அமைச்சின் கீழ் இயங்கும் நிறுவனங்களின் முன்னேற்றம்

## 4.1 பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியம்

### 4.1.1 பின்னணி

பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியமானது, பெருந்தோட்ட வாழ் சமூகத்தினரின் வாழ்வாதாரத்தினை முன்னேற்றுவதற்கு 1992 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 18ஆந் திகதி "பெருந்தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி நிதியம் என்ற பெயரில் முதன் முதலில் ஸ்தாபிக்கப்பட்டு 1982 ஆம் ஆண்டின் 17ம் இலக்க இலங்கை கம்பனிகள் சட்டத்தின் கீழ் பெருந்தோட்டத்துறை சமூகத்தினரின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதற்காக கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியாகும். 2002 அக்டோபர் 22ஆந் திகதி இவ்வமைப்புக்கு பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியம் என பெயர் மாற்றப்பட்டது. தற்போது 2007ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இது மீள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட நோக்கை வெற்றிகரமாக மேற்கொள்ளும் பொருட்டு பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறது.

- தோட்டப்புற மக்களின் வரிசை வீடுகளுக்கு பதிலாக தனி வீடுகளை அமைத்துக்கொடுத்தல்
- பழைய வரிசை வீடுகளை புனரமைத்தலும் கூரைகளை திருத்துதலும்.
- நீர் வழங்கல் மற்றும் சுகாதார செயற்பாடுகளை முன்னேற்றுதல்
- சிறுவர் அபிவிருத்தி நிலையங்களையும் கணனி நிலையங்களையும் (E- Kiosk) அமைத்தல்
- சமூக அபிவிருத்தி செயற்றிட்டங்களை அமுல்படுத்தல் - பாதைகள் கட்டடங்கள் மற்றும் மத வழிபாட்டு நிலையங்கள் முதலியவற்றை அமைத்தல்
- சுகாதார வசதிகளையும் சமூக அபிவிருத்தி திட்டங்களையும் வழங்கல்
- விற்பனை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

### 4.1.2 தொடர்புடைய நிறுவனங்களும் நிறுவன கட்டமைப்பும்

பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியமானது, கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இது இலங்கை அரசாங்கம், பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகள் மற்றும் பெருந்தோட்ட துறைசார் பிரதான தொழிற் சங்கங்கள் எனும் மூன்று தரப்பினரை உள்ளடக்கி, ஏறத்தாழ ஒரு மில்லியன் பெருந்தோட்ட மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதன் பொருட்டு நிகழ்ச்சித் திட்டங்களை இணைப்பாக்கம் செய்யவும் அவற்றிற்கு அனுசரணை வழங்கவும் இலங்கை அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டது.

பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியானது, அரசின் அமைச்சுக்களோடும், பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளோடும் பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுடன் இணைந்து பணிகளை மேற்கொள்கின்றது.

பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியமானது, இலங்கை அரசாங்கம் பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகள் ஆகியவற்றை பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர் சபை ஒன்றின் கீழ் தொழிற்படுகிறது. முகாமைத்துவமானது பணிப்பாளர் நாயகத்தினால் தலைமை வகிக்கப்படும் அதேவேளை, அவருக்கு உதவியாக உள்ளக பணிப்பாளர்களும் பிரிவுகளில் தலைமை வகிப்பவர்கள் மற்றும் பத்தரமுல்ல தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த பணிக்குழுவினரும் ஒத்தாசை வழங்குகின்றனர். காலி, இரத்தினபுரி, பதுளை, கேகாலை, கண்டி, ஹட்டன் மற்றும் நுவரெலியா ஆகிய இடங்களில் அமைந்துள்ள பிரதேச செயலகங்கள் ஊடாக தலைமை அலுவலகத்தின் நடவடிக்கைகளை மேலும் வலுவடையும் பொருட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது. பிராந்திய பணிப்பாளர் உரிய பிராந்தியத்தின் தலைவராக காணப்படும் அதேவேளை அவருக்கு உதவியாக தொழில்நுட்ப, நிதி முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர்.

## 4.1.3 விசேட நிகழ்ச்சித் திட்டம்

### 4.1.3.1 தோட்ட தொழிலாளர் வீடமைப்பு கூட்டுறவு சங்கம்

1993 ஆம் ஆண்டு தோட்ட தொழிலாளர் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கம் கூட்டுறவு திணைக்களத்துடன் இணைந்து ஸ்தாபிக்கப்பட்டது. வீடமைப்பு திட்டங்களை அமுல்படுத்துவதற்காக பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளால் நிறுவகிக்கப்படும் 435 தோட்டங்களை அடிப்படையாக கொண்டு இச்சங்கங்கள் செயல்படுகிறது.

குறிப்பாக வீடமைப்பு செயற்றிட்டங்களை அமுல்படுத்துவதற்காக இலங்கையின் பொருளாதார மாதிரிகளில் ஒன்றாக சமூக அமைப்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்வமைப்பு கடந்த பல வருடங்களாக வெற்றிகரமாக விருத்தி செய்யப்பட்ட அதேவேளை பெருந்தோட்ட சமூகத்தின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் மற்றும் வறுமையைக் குறைத்தல் என்பவற்றில் கணிசமான பங்களிப்பை வழங்கியிருந்தது.

இவ்வலையமைப்பின் அபிவிருத்திக்கும் நிலைத்த தன்மைக்குமாக பல்வேறு நிகழ்ச்சிகள் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய பூர்வாங்க வேலைகளுடன் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன. சமையல் செய்வதற்கு விறகு பாவனைக்கு பதிலாக வாயு (கேஸ்) பாவனை போன்றவற்றினால் சுவாசம் சம்பந்தப்பட்ட சுகாதார கேடுகளிலிருந்து மீள்வது மாத்திரமின்றி, இதன் மூலம் வேலைக்கு சமூகமளிப்பதில் முன்னேற்றமும், காடுகளை அழித்தல் மற்றும் சுற்றாடல் மாசடைவும் குறைவடைந்துள்ளது.

#### 4.1.3.2 தோட்டத்துறை சுகாதார மேம்படுத்தல் மற்றும் முன்னேற்றம்

பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியமானது தோட்டத்துறையின் சுகாதார நிலைமைகளை மேம்படுத்த படிமுறைகளை முன்னெடுத்துள்ளது. அவற்றின் மேம்படுத்தல் குறிகாட்டிகள் கீழ்வரும் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ளன.

**தோட்டத்துறையில் சுகாதாரத்தை முன்னேற்றுவதற்காக அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்**

1. 2004/05 காலப்பகுதியில் முக்கியமான தோட்டங்களில் சுகாதார ஊழியர்களுக்கு 220 மோட்டார் சைக்கிள்களும் 98 அம்புலன்ஸ் வண்டிகளும் வழங்கப்பட்டன.
2. பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளின் தோட்டப் பகுதிகளில் போஷாக்கு மற்றும் விசேட தாய்ப் பாலூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.
3. சகல பிராந்திய பெருந்தோட்ட கம்பனிகளின் தோட்டங்களில் தோட்ட சுகாதார மற்றும் நலன்புரி உத்தியோகத்தர்களுக்கு விசேட சுகாதார நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்றன.
4. ஆண் பெண் இருபாலருக்கும் சமூகத்தில் ஏற்படக்கூடிய வன்முறை தொடர்பில் தயாரிக்கப்பட்ட செயற்றிட்டங்களை அமுல்படுத்துதல்.
5. சிறுவர் அபிவிருத்தி நிலையங்களின் வசதிகளை முன்னேற்றுவதற்காக 70 சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள், இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் மேம்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தளபாடங்கள் மற்றும் உபகரண வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன.
6. பெருந்தொட்ட மனித அபிவிருத்தி நிதியமானது சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகளை வழங்கிய அதேவேளை, சிறுவர் அபிவிருத்தி மற்றும் ஆரம்ப பாடசாலை கல்வி முகாமைத்துவம் பற்றிய தேசிய கற்கைநெறிகள் நடாத்தப்பட்டுள்ளன. இதுவரையில் 563 சிறுவர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன.
7. சிறுவர்கள் மற்றும் தாய்மாருக்கான போஷாக்கு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.
8. சுகாதார சமூக நலன்புரி அலுவல்கள் தொடர்பாக தோட்ட மருத்துவ உதவியாளர்கள் / தோட்ட மருத்துவ நலன்புரி உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளன.
9. தொற்றுநோய் மற்றும் தொற்றுநோய் அல்லாத நோய்கள் சம்பந்தமான நிகழச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**அட்டவணை 10 : தோட்ட சுகாதார துறையின் முன்னேற்றம்**

**அட்டவணை 10.1: நிறுவன ரீதியாக பதிவு செய்யப்பட்ட பிறப்பு**

| வருடம் | வீதம் |
|---|---|
| 1985 | 60.8 |
| 1995 | 89.0 |
| 2000 | 96.0 |
| 2013 | 99.4 |

மூலம்: பெருதோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியம்

**அட்டவணை 10.2 கர்ப்பினி தாய்மாரின் இறப்பு வீதம்**

| வருடம் | வீதம் |
|---|---|
| 1985 | 23.0 |
| 1995 | 15.0 |
| 2000 | 13.7 |
| 2011 | 2.76 |

மூலம்: பெருதோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியம்

**அட்டவணை: 10.3. சிசு மரண வீதம்**

| வருடம் | வீதம் |
|---|---|
| 1985 | 49.0 |
| 1995 | 28.0 |
| 2000 | 18.0 |
| 2013 | 10.0 |

மூலம்: பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியம்

**அட்டவணை10.4 : நிறை குறைவான பிறப்பு**

| வருடம் | வீதம் |
|---|---|
| 1988 | 20.4 |
| 1998 | 15.3 |
| 2008 | 15.5 |
| 2013 | 20.0 |

மூலம்: பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியம்

### 4.1.4. கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சின் நிதி வழங்களின் கீழ் பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி பொறுப்பு நிதியத்தினால் அமுல்படுத்தப்பட்ட செயற்றிட்டங்கள்

**அட்டவணை: 11 (அபிவிருத்தி நடவடிக்கைகளின் நிதி முன்னேற்றம் (2014.12.31))**

| செயற்றிட்ட வகை | செலவின் மதிப்பீடு (ரூ.மி) | செலவு ((ரூ.மி) | % |
|---|---|---|---|
| 2013 ஆண்டின் தொடர்கின்ற வேலை | 323.84 | 268.89 | 83% |
| 2014 ஆண்டின் புதிய வேலைத்திட்டம் | 769.75 | 414.63 | 54% |
| மொத்தம் | **1,093.59** | **683.52** | |

மூலம்.: பெருதோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியம்

**அட்டவணை 12 : (2013 இல் தொடர்ச்சியான நிகழ்ச்சித்திட்டம்/கருத்திட்டம் - பிரதேச அடிப்படையில் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியத்தின் முன்னேற்றம)**

| பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதிய பிரதேசம் | வீடமைப்பு நிர்மாணம் | | மீள கூரைத்தகடு இடுதல் | | நீர் வள கருத்திட்டம் | | மலசலக் கூடம் | | வீதி | | வேறு அலுவல்கள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அலகு எண்ணிக்கை | நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை | அலகு எண்ணிக்கை | நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை | கருத்திட்ட எண்ணிக்கை | நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை | அலகு எண்ணிக்கை | நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை | கருத்திட்ட எண்ணிக்கை | நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை | கருத்திட்ட/ அலகு எண்ணிக்கை | நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை | **அமுல்படுத்தப் பட்ட கருத் திட்டம் /அலகு எண்ணிக்கை** | **2014 ஆண்டில் நிறைவு செய்யப் பட்ட எண்ணிக்கை** |
| **நுவரெலியா** | 157 | 50 | 144 | 144 | 1 | 1 | 205 | 205 | _ | _ | 3 | 3 | **510** | **403** |
| **ஹட்டன்** | 66 | 22 | 72 | 72 | _ | _ | 255 | 255 | 1 | 1 | 10 | 10 | **404** | **360** |
| **காலி** | 101 | 74 | 33 | 33 | 5 | 2 | 60 | 60 | _ | _ | 3 | 3 | **202** | **172** |
| **கண்டி** | 51 | 51 | _ | _ | _ | _ | 150 | 150 | _ | _ | 2 | 2 | **203** | **203** |
| **கேகாலை** | 54 | - | _ | _ | 1 | 1 | 150 | 150 | 2 | 2 | 5 | 4 | **212** | **157** |
| **இரத்தினபுரி** | 25 | - | _ | _ | _ | _ | 150 | 150 | 2 | 2 | 3 | 2 | **180** | **154** |
| **பதுளை** | 25 | 25 | _ | _ | _ | _ | 200 | 200 | 2 | 2 | 2 | 2 | **229** | **229** |
| **மொத்தம்** | **479** | **222** | **249** | **249** | **7** | **4** | **1170** | **1170** | **7** | **7** | **28** | **26** | **1940** | **1678** |

மூலம்: தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு (அபிவிருத்தி பிரிவு), * வேறு அலுவல் : சமய, கலாசார, கல்வி அபிவிருத்தி பொது வசதிகள் மற்றும் விசேட அலுவல்கள்

**அட்டவணை 13: (2014 இல் புதிதாக அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் /கருத்திட்டங்களின் முன்னேற்றம்)**

| பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதிய பிரதேசம் | வீடமைப்பு நிர்மாணம் | | மீள் கூரைத்தகடு இடுதல் | | நீர் வள கருத்திட்டம் | | மலசலக் கூடம் | | வீதி | | வேறு அலுவல்கள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அலகு எண்ணிக்கை | நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை | அலகு எண்ணிக்கை | நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை | கருத்திட்ட எண்ணிக்கை | நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை | அலகு எண்ணிக்கை | நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை | கருத்திட்ட எண்ணிக்கை | நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை | கருத்திட்ட/ அலகு எண்ணிக்கை | நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை | **அமுல்படுத்தப் பட்ட கருத் திட்டம் /அலகு எண்ணிக்கை** | **2014 ஆண்டில் நிறைவு செய்யப்பட்ட எண்ணிக்கை** |
| **நுவரெலியா** | 96 | - | - | - | 1 | - | 100 | - | 3 | - | 12 | 4 | **212** | **4** |
| **ஹட்டன்** | 40 | - | - | - | 6 | 1 | 100 | - | 4 | 1 | 30 | 10 | **180** | **12** |
| **காலி** | 20 | - | - | - | 2 | 1 | - | - | - | - | 2 | 1 | **24** | **2** |
| **கண்டி** | 80 | - | 57 | 57 | 1 | - | 10 | - | 32 | - | 3 | 1 | **183** | **58** |
| **கேகாலை** | 64 | - | - | - | 3 | 3 | - | - | 13 | 2 | 15 | 4 | **95** | **9** |
| **இரத்தினபுரி** | 40 | - | - | - | - | - | - | - | 1 | 1 | 2 | 1 | **43** | **2** |
| **பதுளை** | 20 | - | - | - | 5 | 2 | 1 | - | 24 | 20 | 56 | 41 | **106** | **63** |
| **மொத்தம்** | **360** | **-** | **57** | **57** | **18** | **7** | **211** | **-** | **77** | **24** | **120** | **62** | **843** | **150** |

மூலம்: தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சு (அபிவிருத்தி பிரிவு), * வேறு அலுவல் : சமய, கலாசார, கல்வி அபிவிருத்தி பொது வசதிகள் மற்றும் விசேட அலுவல்கள்